பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை (31.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 335

## ஜெனிவாப் பேச்சுகள் முடிந்த பின் தமிழ்ச்செல்வன் செவ்வி:

# அரசு போர்தான் என்றால் புலிகளும் அதற்குத் தயார்!

## தற்காத்துக்கொள்வதே தமிழர்களுக்கு ஒரே வழி முடிந்தால் சர்வதேசம் தலையிட்டு தடுக்கட்டும்



- ஜெனிவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனிவா,ஒக்ரோபர்31

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது வலிந்து ஒரு போரைத் திணிக்கத் தயாராகின்றது. போர்தான் அரசின் நிலை என்றால் அதனை எதிர்கொள்ளப் புலிகளும் தயாராகவே உள்ளனர். தங்கள் மீது திணிக்கப்படுகின்ற ஆயுத வன்முறையை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகப் போராட வேண்டிய கட்டாயத்தினுள் தமிழ்மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரும், பேச்சுக்குழுவின் தலைவருமாகிய சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஜெனிவாவில் பேச்சுகள் முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா இனவாதத் தலைவர்களால் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, தமிழ்மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டபோதுதான் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தும் கட்டத்துக்கு வந்தார்கள்.

ஆயுத வன்முறைகள் எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட நிலையில்தான் - தற்காப்பு நிலையில்தான் - ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகியது.

ஸ்ரீலங்கா அரசு ஒரு கொடிய யுத்தத்தை

(02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குழு வன்னி திரும்புகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.31

ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுக்களில் பங்குகொள்ளச் சென்ற விடுதலைப் புலிகளின் குழு இன்று வன்னி திரும்புகின்றது.

இன்று சுவிற்ஸர்லாந்தின் சூரிச் விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்காவரும் புலிகளின் குழு உடனடியாக ஹெலிக்கொப்டர்மூலம் வன்னிக்குத் திரும்பவுள்ளது.

பேச்சுக்களை முடித்துக்கொண்டு நோர்வே, அயலர்லாந்து ஆகிய நாடுகளுக்கு புலிகளின் குழு விஜயம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததும் -

பேச்சுக்கள்தோல்வியடைந்ததையடுத்து உடன் வன்னி திரும்ப அவர்கள் முடிவு செய்திருந்தமையும்- தெரிந்ததே. (அ-1)

## அவசரமோ, ஆத்திரமோ வேண்டாம் விபரீத முடிவுகளுக்கு வந்துவிடாதீர்!

### இரு தரப்புகளிடமும் நோர்வே வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 31

ஜெனிவாப் பேச்சின் பலாபலன்களையும், நிலைமைகளின் பிரதிபலிப்புகளையும் கொஞ்சக்காலம் காத்திருந்து அறிந்து கொள்வதற்கு முன்னர் அவசரப்பட்டு எந்த ஒரு முடிவுக்கோ அல்லது ஆத்திரப்பட்டு இலங்கை வாழ் மக்களின் அவலங்களை மேலும் அதிகரிக்கச் செய்யும் செயல்களிலோ, நடவடிக்கைகளிலோ விடுதலைப் புலிகளும் அரசும் ஈடுபடக்கூடாது என்று இரண்டுநாள்ஜெனிவாப்பேச்சைத்தொடர்ந்து நோர்வே அனுசரணையாளர்கள் விடுத்த அறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் நோர்வே கலந்து பேசியும், விவாதித்தும் வரும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செப்டெம்பர் 12ஆம் திகதி பிரஸெல்ஸில் நடந்த இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில், டோக்கியோ இணைத் தலைமை நாடுகள், சம்பந்தப்பட்ட இரு

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கு ஏ-9 வீதியா? மாற்றுவழியா? ஜனாதிபதியுடன் பேசிய பிறகே தீர்மானம்

### அரச பேச்சுக்குழுவினர் ஜெனிவாவில் தெரிவிப்பு

ஜெனிவா,ஒக். 31

ஏ-9 தரைப்பாதையை உடனடியாகத் திறக்க முடியாது என்று கூறியிருக்கும் அரசுத்தரப்பினர், எனினும், குடாநாட்டுக்கு ஏ-9 பாதையா அல்லது மாற்றுப் போக்குவரத்து மார்க்கமா என்ற விடயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்து பேசிய பின்னரே தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றனர்.

இரண்டுநாள் பேச்சுக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அரச பேச்சுக்குழுவின் பிரதிநிதிகள் இப்படித் தெரிவித்தனர்.

யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும். அதேசமயம், ஏ-9 வீதியைத் திறப்பது இப்போதைக்குச் சாத்தியப்படாது. எனினும், இது விடயத்தில் ஜனாதிபதியுடன் விரிவான முறையில் கலந்து பேசிய பின்னரே ஏ-9 பாதையைத் திறப்பதா அல்லது அதற்கான மாற்று வழிகளைக் கையாள்வதா என்பது முடிவு செய்யப்படும் - என்றும் அரச பிரதிநிதிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை சேருநுவர பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினர் சுட்டுக்கொலை!

திருகோணமலை,ஒக்.31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட சேருநுவர பிரதேசசபையின் ஒரேயொரு தமிழ் உறுப்பினரான கே.பத்மகலாபன் (வயது - 26) என்பவர் நேற்றுக் காலை 10 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை இவர் சேருநுவரவில் வங்கி ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வருகையில் சேருநுவர பொலிஸ் நிலையத்திற்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகள் பலவும் முடங்கிப்போகும் அபாய நிலை உருவாகிறது!

### டீசல் கையிருப்பு தீர்ந்துபோனதன் விளைவு

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் பலவும் முடங்கிப் போகும் இக்கட்டான - அபாய - நிலை தோன்றியுள்ளது.

டீசல் கையிருப்பு அடிமட்டத்துக்குக் குறைந்து, தீர்ந்துபோகும் கட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதனாலேயே போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி, அத்தியாவசிய சேவைப் பணியகங்கள் மற்றும் பிரதான சேவைகள் முற்றாக முடங்கிப்போகும் அபாயம் தோன்றியுள்ளது.

டீசல் கையிருப்புத் தீர்ந்துபோனதால் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஒரு சிலவே நேற்றுச் சேவையில் ஈடுபட்டன. பாடசாலைச் சேவை பஸ்கள் மட்டுமே அவை.

பொதுமக்களுக்குரிய பொதுச்சேவை பஸ்கள் சேவையில் ஈடுபடாததால் அவசர தேவைகள் கருதிப் புறப்பட்ட மக்கள் பாடசாலைச் சேவை பஸ்களில் பயணம் செய்தனர் என்று பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்தனர்.

அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பாடசாலை பஸ்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். தனியார் சிற்றூர்தி சேவை நடைபெற்றதால் மக்கள் அவசர தேவைகளுக்கான பயணங்களை மேற்கொள்ள முடிந்தது.

இன்று பாடசாலை பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்படும் என்று போக்குவரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. நகரப் பகுதியில் குறுகிய தூர சேவைகளில் மட்டுமே அவை ஈடுபடுத்தப்படவுள்ளன. டீசல் கைக்கு வந்து சேராவிடில் அந்தச் சேவைகளையும் நிறுத்த நேரிடும் என்று மேலும் அறியவந்தது.

மின்சாரம்

இலங்கை மின்சாரசபையின் டீசல் கையிருப்புக் குறைந்து போனமையால்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்கள் நேற்று கப்பல் மூலம் அனுப்பிவைப்பு

### அமைச்சர் பௌசி தகவல்

யாழ்ப்பாணத்துக்கு 540 பரல் பெற்றோல், 2ஆயிரம் தொன் டீஸல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன கப்பல் மூலம் நேற்று அனுப்பப்பட்டதாக போக்குவரத்து அமைச்சர் எச்.எம். பௌசி தெரிவித்தார்.

அவற்றுக்கு மேலதிகமாக ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருள்கள் கப்பல் மூலம் நாளை குடாநாட்டுக்கு அனுப்பப்படவிருக்கின்றன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசு போர்தான் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது மக்கள் மீது திணித்திருக்கின்றபோது, எமது மக்கள் ஒன்றும் செய்யமுடியாத நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் தங்களைத் தற்காத்துக் கொள்ள போராடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்; தள்ளப்பட்டுள்ள நிலையில் உள்ளனர்.

ஆகவே, அமைதி வழியில் ஒரு சமாதானத்தீர்வை அடைய முயன்றாலும் இலங்கை அரசு அனைத்து வழிகளையும் மூடி மீண்டும் எமது தேசத்தின் மீதும் மக்கள் மீதும் ஒரு கொடிய யுத்தத்தைத் திணிக்கவே முயல்கின்றது.

ஆகவே, விரும்பியோ - விரும்பாமலோ அதை எதிர்கொண்டே யாக வேண்டும். தமிழ்மக்கள் தற்காத்துக் கொள்வதற்கு வேறு மாற்று வழி இல்லை என்றே கருதுகின்றேன்.

ஒரு சிறிய மனிதாபிமானப் பிரச்சினைக்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகளை நிராகரித்து - உதாசீனப் படுத்தி - மீண்டும் போர்ச் சூழலை எமது தேசத்தின் மீது திணிக்க - எம்மீது திணிக்க - ஸ்ரீலங்கா அரசு முயன்று கொண்டிருக்கின்றது.

பெரிய போர் நடவடிக்கைக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதை அனுசரணையாளர்களுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துவிளக்கியுள்ளோம்.

ஆகவே, எம்மீது திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு மாற்றுவழி இல்லை. சர்வதேசத்தால் முடிந்தால், சர்வதேசத்தின் பேராதரவுடன் கொண்டுவரப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்தி கண்காணிப்புக் குழுவை செயற்படவைத்தும் வன்முறைகளுக்கு முடிவுகட்டி சமாதான முயற்சிகளை முன்கொண்டு செல்வதற்கு ஸ்ரீலங்கா அரசை வழிக்குக் கொண்டுவர முடியும்.

**ஜெனீவா மையம்**

மனிதாபிமான அவலத்தை வெளிப்படுத்தவே ஜெனிவாப் பேச்சுக் களத்தைப் பயன்படுத்துவோம் என்று நாம் தெரிவித்திருந்தோம். உலகத்தின் மனிதாபிமான மையமான, மனித உரிமைகளின் மையமான ஜெனிவாவின் மையத்தில் நின்று கொண்டு எம்மக்களினது மனிதாபிமான வேண்டுகோளை விடுத்திருக்கிறோம். அந்த வகையில் எம்முயற்சி வெற்றி பெற்றுள்ளது. ஆனால் எமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவுக்கு நாங்கள் வரும்போது தெட்டத்தெளிவாக எம் கருத்தை முன்வைத்துவிட்டுத்தான் வந்தோம். தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய எந்த ஒரு சிறு விட்டுக்கொடுப்பையும் மேற்கொள்ள ஸ்ரீலங்கா அரசு ஒத்துழைக்கும் என்று நாம் நம்பவில்லை. முழுமையாக சர்வதேச சமூகத்தை நம்பியே அவர்களினது அழைப்புக்கு மதிப்பளித்து நாம் வந்தோம் என்று கூறியிருக்கிறோம். ஸ்ரீலங்கா அரசு ஒத்துழைக்கும் என்று சிறு அளவில்கூட நம்பிக்கையில்லாமல் தான் வந்தோம். அது இங்கே நிரூபணமாகியிருக்கிறது. தனது முகத்தை ஸ்ரீலங்கா அரசு அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. ஸ்ரீலங்கா அரசு தொடர்பான தனது நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்திருக்கும்.

சர்வதேச சமூகம் எம்மை ஒரு நம்பிக்கையோடு அழைத்துக் கொண்டுவந்தது. ஆனால் ஸ்ரீலங்கா அரசு முரண்டுபிடித்து தன்னுடைய பிடிவாதத்தைக் காட்டி எங்களுடைய மக்களின் பேரவலத்துக்கு தீர்வேற்படுத்தும் ஒரு மிகச் சிறிய நடவடிக்கையான - யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலே உள்ள நடைமுறையான - 6 லட்சம் மக்களுக்கான முக்கிய தரை வழிப்பாதையாகவுள்ள ஏ-9 பாதையைத் திறப்பனத மறுத்துவிட்டது. இதனால் இந்தப் பேச்சு முயற்சியை முடக்கியிருக்கின்றார்கள். இந்தப் பழியை ஸ்ரீலங்கா அரசே ஏற்கவேண்டும்.

இருநாட்கள் நாங்கள் எடுத்த முயற்சிகளில் எந்தவிதமான இணக்கப்பாட்டுக்கும், விட்டுக்கொடுப்புக்கும் ஸ்ரீலங்கா அரசு முன்வரவில்லை. ஸ்ரீலங்கா அரசு அமைதி வழியில் எமது மக்களுடைய மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கோ, அரசியல் கோரிக்கைகளுக்கோ, அரசியல் தீர்வு முயற்சிகளுக்கோ எந்த விதத்திலும் அனுசரித்துப் போகும் தன்மையை வெளிப்படுத்தவில்லை. அவர்கள் யுத்த வெறிப்போக்கையும் ஒரு வன்முறைச் செய்தியாகத் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கும் இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குமான ஒரு வெளிப்பாட்டைதான் காட்டிக்கொண்டுள்ளனர். நிச்சயமாக இது தமிழ் மக்களை மட்டுமல்ல ஸ்ரீலங்காவையே ஒரு பேரழிவுக்குள் தள்ளுகிற முயற்சியாக ஸ்ரீலங்கா பேரினவாத தலைமைகள் தங்களது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்பதைத்தான் வெளிப்படுத்தியுள்ளனர்.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஸ்ரீலங்கா அரசின் அநீதியான - கொடூரமான - செயற்பாடுகளை முறியடிக்க முன்வரவேண்டும்.

உலகம் இதனை வெகுவிரைவில் புரியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளது. நிச்சயமாக சர்வதேச சமூகம் ஸ்ரீலங்கா அரசு தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும்; எடுக்கும் நிலை உருவாகும்.

சிங்கள இனவாதத் தலைவர்களை ஒருவழிக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் பெருமுயற்சி எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**பேச்சின்போதும் தாக்குதல் முயற்சி**

வலிந்த தாக்குதல்களை இரு தரப்பும் மேற்கொள்ளாது என்று நோர்வே அனுசரணையாளர்கள் சொல்லியிருந்தனர். ஆனால், பேச்சு நடந்துகொண்டிருக்கும்போதே - பேச்சு அரங்கில் இருக்கும்போதே தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வலிந்த தாக்குதல் முயற்சிகளை நாம் எடுத்துக்கூறினோம். ஆனால், இதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீலங்கா அரசானது கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டைப் பொய்யான காரணங்களைக் கூறி முடக்கிவிட்டு மீண்டும் மீண்டும் எமது மக்கள் மீது இன அழிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிடத்தான் முயற்சிக்கிறது. இதிலிருந்து எமது மக்கள் விடுதலை பெற - சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தொடர - எமது தலைவரின் வழியில் நின்று போராடுவார்கள்.

புலம்பெயர் வாழ் எம்மக்கள் என்றுமில்லாத வகையில் முழுமையான ஆதரவை வழங்குவர். ஏனெனில், மனிதாபிமானம் பேசப்படுகிற ஜெனிவாவின் தலைநகரில் நாங்கள் வந்துநின்றுகொண்டு எம்மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையை முன்வைத்தோம். அது நிராகரிக்கப்பட்டிருப்பது எம் மக்களின் மனங்களை புண்படுத்தியுள்ளது. அவமானப்படுத்தியுள்ளது. ஆகவே, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அணிதிரள வைக்கின்ற ஏற்பாட்டையே இப்போது ஸ்ரீலங்கா அரசு ஜெனிவாவில் வந்து செய்துவிட்டுப் போகிறது.

தமிழ் மக்களை அனைத்து வகைகளிலும் அழித்தொழிக்க, கொன்றொழிக்க ஸ்ரீலங்கா அரசு முயன்று கொண்டிருக்கிறது. இராணுவ நடவடிக்கை, கொடிய பயங்கரவாத நடவடிக்கை, எம்மக்களைத் தாங்கிநிற்கும் புலம்பெயர் மக்கள் அளிக்கின்ற உதவிகளை கொண்டு சேர்க்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி முடக்கம் ஆகியவற்றின் மூலம் இத்தகைய கொடூரத்தை நிகழ்த்த ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது. தாயகத்திலே சர்வதேச மனிதாபிமான அமைப்புகளைக் கூட முடக்கியுள்ளனர். அவர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் பலவீனப்படுத்தியுள்ளனர். இதனை சர்வதேச அமைப்புகள் கண்டித்துள்ளன. ஸ்ரீலங்கா அரசின் கொடூரங்கள் இது மட்டுமல்ல. இனியும் வரும்.

**தலைமைப் பீடமே உத்தியை வகுக்கும்**

எங்களுடைய மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியவகையில் தேவையும் சூழலையும் கருதி எங்களது உத்திகளை தலைமைப் பீடம் எடுக்கும். எமது தேசியத்தலைவரின் வருடாந்த கொள்கைப்பிரகடனமானது மிக மிக முக்கியமானது. மிகவும் எதிர்பார்க்கப்படுகின்ற- எதிர்பார்க்கப்படும் விடயமாக உள்ளது. ஸ்ரீலங்கா அரசின் கொடூரமான நடவடிக்கைகள் தொடர்பாகவும், சர்வதேசசமூகம் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், எமது மக்கள் எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்கவுள்ள விடயங்கள் தொடர்பாகவும் எமது தேசியத்தலைவரின் அந்தக் கொள்கைப்பிரகடன உரை வரும் என்று நினைக்கின்றேன். நிச்சயமாக நாங்களும் அந்த உரையை ஆவலாக எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீலங்கா அரசானது பேச்சுகளுக்கான நாள்கள் தீர்மானிக்கப்பட்ட நிலையிலும் மிகப் பிரமாண்டமான ஒரு படையெடுப்பை எமது தேசத்தின் மீது கட்டவிழ்த்துவிட்டது. அதனை எம் மக்கள் எப்படி எதிர்கொண்டனர் என்பது உலகறிந்த உண்மை.

எமது மக்களின் நெற்றியிலே துப்பாக்கிகளை நீட்டி வைத்துக் கொண்டு எங்களை அழிக்க ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும்போது எம் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் வழியைத் தவிர வேறு வழி யில்லை.

ஆகவே, ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கை மற்றும் படையெடுப்புக்களை எதிர்கொண்டு அதனை வெற்றி கொள்ள- தங்களைப் பாதுகாக்க- தங்களது தலை விதியை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் வழிதான் தமிழ் மக்களுக்கான வழி. அந்த இறுதிக் கட்டத்தைப் பூர்த்தள்ள முடிய போர் மீது எம் மக்கள் விருப்ப மின்றி இருந்தாலும் துரதிஷ்டவசமாக மக்கள் எதிர்கொள்வர். நீதியும், நியாயமும், தர்மமும் எம் பக்கமே உள்ளது. அதுவே வெற்றி பெறும் - என்றார் சு.ப. தமிழ்ச் செல்வன்.

(ஐ-1-3)

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விய வருடம் ஐப்பசித்திங்கள் பூர்வபட்சம் 15ஆம் நாள் [01.11.2006] புதன்கிழமை முற்பகல் 11.27 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள ஏகாதசி திதியும் சதய நட்சத்திரமும் மகாலக்கின சித்தாமிர்த சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சதீஸ்கண்ணா** | **மஞ்சுளா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்துவதுடன் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி க.மஹாலக்சுமி குடும்பம்,
ஆலங்குழாய், சண்டிலிப்பாய்.

(54824)

திருமதி ந.இராஜேஸ்வரி குடும்பம்
ஒட்டுவெளி, மிருசுவில்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

## கண்ணீர் அஞ்சலி

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளரும் கிழக்கு வலயத்தின் தற்போதைய உதவிப் பொது முகாமையாளருமான **துரைசிங்கம் ரகு** அவர்களின் தாய்

**திருமதி துரைசிங்கம் செல்வராணி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் வங்கி, சுன்னாகம் கிளை,
நலன்புரிச் சங்க ஊழியர்கள்.

## சுகாதாரப் பகுதியின் கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ்.சுகாதார மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல நிறுவனத் தலைவர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.(202)

## மரண அறிவித்தல்கள்

### குட்டித்தம்பி சின்னத்துரை



மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது 939, அளுத்மாவத்தை கொழும்பில் வசித்தவருமாகிய குட்டித்தம்பி சின்னத்துரை நேற்று முன்தினம் (29.10.2006) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி - கண்மணி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னு - நாகி தம்பதியரின் அன்பு மருமகனும் பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும், ரஜீவி (லண்டன்), ரஜனி (இத்தாலி), ரஜீவ் (லண்டன்), ரமா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் (லண்டன்), சிவகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் வஸ்மினா (லண்டன்) அனோஜன் (லண்டன்), மியூசிக்கா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் நவரட்ணம் (கனடா), மணி, இராமசாமி (ஜேர்மனி), கமலா, லீலா, தர்மவதி (சுவிஸ்), இரத்தினசிங்கம் (ஜேர்மனி), வவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் பரமேஸ்வரி (கனடா), தங்கா (ஜேர்மனி), பூபாலு, காலஞ்சென்ற நல்லையா, சற்குணராசா, தவராசா (சுவிஸ்), ரோகினி (ஜேர்மனி), சுகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூன்று கோவிலடி, உரும்பிராய் மேற்கு.
T.P: 0602212629.
: 0112523088.

தகவல்:
குட்டித்தம்பி கண்மணி (தாய்)

54823

### இரத்தினம் பரமலிங்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை (ரொரன்றோ) வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பரமலிங்கம் 29.10.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் புஷ்பமலரின் பாசமிகு கணவரும் அமரர் பூபாலராஜா - செல்வரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற குணவதி மற்றும் சிவனாந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் துளசி(சுவிஸ்), ஸ்ரீராம் (கனடா), ஸ்ரீபதி (கனடா), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசுதன் (சுவிஸ்), இந்துஜா (கனடா), பிரதீப் ஆகியோரின் பாசமிகு மாமனும் வானதி (சுவிஸ்), இலக்கியன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் குணரட்ணம் (ஜேர்மனி), ரதி, ஜெயரத்தினம் (கனடா) ஆகியோரின் மாமனும், கோதைநாயகியின் மைத்துனரும் மதன் (ஜேர்மனி), ஜெயமதனி (கனடா) ஆகியோரின் பெரிய தகப்பனும் புவனேஸ்வரராசா, புஸ்பதேவி, கலாவதி, அருளானந்தம் (கனடா), தீராவதி, மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்கு கனடாவில் (ரொரன்றோ) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை தெற்கு, சுன்னாகம்.

தகவல்:
ரதி (மருமகள்),
புவனேஸ்வரராசா (மைத்துனன்).

54820

### சின்னத்தம்பி இராசம்மா



கப்பூதுவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இராசம்மா அவர்கள் 30.10.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகம்மாவின் சகோதரியும் யோகேஸ்வரி (பூமணி), மங்களேஸ்வரி (இந்தியா), மகேஸ்வரி (பேபி), மகாலிங்கம், யோகராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிமேர்ழ் சின்னத்தம்பி, கந்தசாமி (இந்தியா), காலஞ்சென்ற துரைசிங்கம், அதிசயம், ராஜரெட்ணம் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

651/3, நாவலர் வீதி, நல்லூர்.

தகவல்:
மகாலிங்கம் (மகன்), மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப் பிள்ளைகள்.

54821

### செல்லையா தியாகராஜா



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும், ஈஞ்சடி, சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராஜா (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்) நேற்று (30.10.2006) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (தொழிலதிபர், அன்னை என்ரபிறைஸ், இந்தியா), ஸ்ரீதரன் (உப அதிபர், யா/நவாலி அட்டகிரி சைவ வித்தி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதமதியின் (ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்பு மாமனும் சாஹித்யனின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
தி.புவனேஸ்வரி (மனைவி),
தி.ஸ்ரீதரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இனி, சர்வதேச சமூகத்தின் பதில் நடவடிக்கை என்ன?

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 'ஜெனிவா - 2' அமைதிப் பேச்சுகள் பயன் ஏதுமின்றி - தோல்வியில் முடிவடைந்துவிட்டன.

இந்தப் பேச்சுகள் மூலம் சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன் நகர்வு கிட்டும் என்று பலரும் கனவு கண்டார்கள். எனினும், இப்படித்தான் இது முடியும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

"இலங்கை அரசுடன் நடத்தும் இந்தப் பேச்சுகளில் எமக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு இடமளித்து இந்த இறுதிக்கட்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் ஜெனிவாவுக்குப் புறப்படுகின்றோம்." - என்று இந்தப் பேச்சுக்காகத் தாயகத்திலிருந்து புறப்படு முன்னரே புலிகளின் பேச்சுக்குழுத் தலைவர் சு. ப. தமிழ்ச்செல்வன் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். அதுவே நடந்துமிருக்கின்றது.

சரி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதிப் பேச்சுகளுக்கு வரையறைகளை - வரம்புகளை - எல்லைகளை - திணிக்க முயன்ற சர்வதேச சமூகம் இனி என்னசெய்யப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

பேச்சுகள் நடைபெறவேண்டிய மார்க்கம் தொடர்பாக சர்வதேச சமூகம் காட்டிய வழிமுறைகளில் முதலாவது - விரைந்து கவனிக்கப்பட வேண்டியது - பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை உடன் தீர்ப்பது பற்றி சிரத்தை எடுப்பதாகும். அந்த விவகாரத்தில்தான் 'ஜெனிவா - 2' பேச்சு முடங்கிப்போய் நிற்கின்றது.

அதுவும் சர்வதேச சமூகம் விடாது வலியுறுத்திவந்த - யுத்தநிறுத்தத்துக்கு வழி வகுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துங்கள் என்ற - கோரிக்கையை ஒட்டியே இம்முறை பேச்சு தோல்வியடைந்திருக்கின்றது.

'ஜெனிவா - 1' பேச்சுகளுக்குப் பின்னர் எழுந்த மனிதப் பேரவலங்களில் யாழ். குடாநாட்டில் திறந்தவெளிச் சிறைக்குள் சிக்கியுள்ள ஆறுலட்சம் மக்களின் மனிதாபிமான நெருக்கடி மிக முக்கியமானதாகும்.

அப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் எழுந்த சிக்கலே இம்முறை பேச்சு தடைப்பட்டு, பயனின்றி முடிவுற்றதற்குப் பிரதான காரணம் என்பதும் வெள்ளிடைமலை.

யாழ். குடாநாட்டில் முப்பது சதவீத நிலப்பரப்பை பாதுகாப்பு உயர்வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்துகொண்டு, அறுபதாயிரம் துருப்புகள் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்க, அதற்கான ஒரேயொரு தரைவழிப் பாதையையும் அரசுத்தரப்பு கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேலாக மூடி வைத்திருப்பதன் மூலம் அந்த மக்களைத் திறந்த வெளிச் சிறைக்குள் தள்ளி மனிதப் பேரவலத்தை அரசுத்தரப்பு உருவாக்கி நிற்கின்றது என்று தமிழர்களின் பக்கத்தில் வலுவாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

தரைவழிப் பாதையை மூடி புதிய 'பேர்லின் சுவரை' தோற்றுவித்த இந்த நடவடிக்கை எத்தகைய பாரியதொரு மனிதப் பேரவலத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை ஏற்கனவே பல தடவைகள் இங்கு விவரித்தாயிற்று.

யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை திறக்கப்பட வேண்டும் என்பது யுத்த நிறுத்தத்துக்கு வழிவகுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் கூறப்பட்ட ஒன்று.

அது மட்டுமல்லாமல் சுமார் எட்டு ஆண்டுகால கொடூர யுத்தத்துக்குப் பின்னர் அரசு - புலிகள் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனாகத் தமிழர் தரப்புக்கு கிடைத்த ஒருசில சாதக அம்சங்களில் - செய்யப்பட்ட நியாயங்களில் - பிரதானமானது இந்தப் பாதை திறப்புத்தான். அந்த நியாயத்தையும், நான்கரை ஆண்டு காலத்துக்குள் குழப்பி மீண்டும் அநியாயத்தையும், அவலத்தையும், கொடூரத்தையும் இழைக்கச் செய்யும் வேலையாக பாதை மூடப்பட்டிருக்கின்றது.

இந்த மனிதப் பேரவலத்துக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு அமைவாகத் தீர்வுகாண இணங்குவதற்கு மறுத்துள்ள அரசுதரப்பு, திறந்த வெளிச் சிறைபோன்ற பிரதேசத்திற்குள் சிக்கியுள்ள 'கைதிகளுக்கு' உணவளிப்பது பற்றிப் பேச முற்படுவதைப் புலிகள் தெளிவாக அம்பலப்படுத்தியிருக்கின்றனர்.

மூடப்பட்ட பாதையை மீளத் திறப்பதற்கு - புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் எழுத்தில் தான் கொடுத்த உறுதியை நிறைவு செய்வதற்கு - தான் இப்போது மறுப்பதற்குரிய காரணங்களை, திருப்திகரமான விளக்கங்களை முன்வைப்பதற்கு அரசுத் தரப்பு தவறியுள்ளமையையும் பேச்சுகளில் புலிகளினால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

பாதை மூடப்பட்ட பகுதியை ஒட்டித் தனது ஆக்கிரமிப்புப் பிரதேசத்தை விஸ்தரிக்கும் இராணுவத் தந்திரோபாயம் கருதியே - மறைமுக சதி நோக்குக்காரணமாகவே - அரசு பாதையைத் திறக்க மறுக்கின்றது என்றும் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

உண்மையில் இத்தகைய உள்நோக்குடைய கபடத்திட்டம் அரசுத் தரப்புக்கு இருந்து அதை அரசுப்படைகள் செயற்படுத்த முயற்சிக்குமானால், தற்போதைய இரண்டுங்கெட்டான் நிலை முற்றாகக் குழம்பி முழுப்போர் மீண்டும் வெடிக்கவும் மிக மோசமான மனிதப் பேரவலம் உருவாகவும் அது காரணமாகிவிடும்.

அப்படி நடக்காமல் இருக்கவேண்டுமானால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நூறுவீதம் நடைமுறைப் படுத்தப்படவேண்டும்; கண்காணிப்புக் குழு பலப்படுத்தப்படவேண்டும்.

இந்த இரண்டு நடவடிக்கைகள் குறித்தும் புலிகள் தரப்பு 'ஜெனிவா - 2'நோக்கி முன்வைத்த கோரிக்கைகளுக்கு இலங்கை அரசுத்தரப்பு முக்கியத்துவம் கொடுக்கவில்லை, அக்கோரிக்கைகளை சிரத்தை கொடுத்து உள்வாங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், யாழ்.குடாநாட்டுக்கான ஒரேயொரு தரைவழிப்பாதையை யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணாக மூடி வைத்துக்கொண்டு, அங்கு சிறையுண்டுள்ள மக்களுக்கு உணவு அளிப்பது தொடர்பான அரசுத் தரப்பின் ஆரவார அறிவிப்புகளைப் பார்த்துக்கொண்டு சர்வதேச சமூகம் இன்னும் வெறுமனே அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு வாளாவிருக்கப்போகின்றதா?

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துங்கள் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது. அந்த ஒப்பந்த வாசகப்படி கட்டாயமாக்கப்பட்ட 'ஏ- 9'பாதைத் திறப்பை செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு மறுக்கின்றது. அதன் காரணமாகவே சர்வதேச சமூகம் வலியுறுத்தும் அமைதிப் பேச்சு முயற்சிகளும் இப்போது தடைப்பட்டுப் போயிருக்கின்றன. இதை சர்வதேசம் பார்த்து மௌனித்திருப்பதன் மூலம் இந்தச் செயற்பாடுகளை அங்கீகரிக்கப்போகின்றதா?

அல்லது நியாயத்தின் பக்கம் குரல் எழுப்பப் போகின்றதா?

சர்வதேச சமூகம் நியாயம் செய்யும், தனது கடப்பாட்டை நிறைவு செய்யும் எனத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

# வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு வன்னியிலிருந்து 46 மீனவர் குருநகருக்கு!

குருநகர், ஒக்.31

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரசு - புலிகள் மோதலின்போது குருநகர் கரைக்குத் திரும்பாது வன்னியில் தரித்துநின்ற குருநகர் கடற்றொழிலாளர்களில் சுமார் 46 மீனவர்கள் நேற்று அதிகாலை கடல் வழியூடாக வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டவாறு தமது கடற்கலங்களில் குருநகரை வந்தடைந்தனர்.

நேற்று காலை 6.30 மணியளவில் குருநகர் இறங்குதுறையில் இருந்து குடாக்கடலில் கல்லடி கடற்பகுதியை நோக்கி படையினர் அகோர எறிகணை மற்றும் துப்பாக்கி வேட்டுக்களை நடத்தினர். கரையோரத்தில் வசிக்கும் மக்கள் அரசு - புலிகள் மோதல்கள் ஆரம்பித்துவிட்டனவோ என அச்சமடைந்து காணப்பட்டனர்.

அச்சமயம் குடாக்கடலை நோக்கிய மக்கள், கடலில் பல படகுகள் வெள்ளைக் கொடிகளுடன் வந்துகொண்டிருப்பதை அவதானித்து குருநகர் இறங்கு துறைக்குச் சென்று படையினரிடம் எமது உறவினர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் வேட்டுக்களைத் தீர்க்கவேண்டாம் என அழுது புலம்பிக் கேட்டனர். அதனைத் தொடர்ந்து படையினர் வேட்டுக்களை இடைநிறுத்தினர்.

இதனிடையில் குருநகர் இறங்குதுறையை நோக்கிச்சென்ற குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் இணையப்பிரதிநிதிகள் படையினரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மீனவர்களின் படகுகளை குருநகர் இறங்கு துறைக்கு வர அனுமதித்தனர்.

**பாலாவியில் இருந்து வந்தனர்**

32 அடி இயந்திரப்படகு ஒன்று மற்றும் 14 பிளாஸ்ரிக் படகுகளுடனும் சுமார் 46 மீனவர்கள் வன்னியில் உள்ள பாலாவிப் பகுதியில் இருந்து புறப்பட்டனர்.

மீனவர்களின் வருகையை அறிந்து யாழ்.பேராலய பங்குத்தந்தை வண. பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார், உதவிப் பங்குத் தந்தை வண. பிதா பாலதாஸ் பிறாயன் அடிகளார், குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை வண.பிதா எஸ். தயாகரன் அடிகளார், நெய்தலம் ஜுயக்குநர் வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகளார் ஆகியோர் குருநகர் இறங்குதுறைக்கு வருகை தந்திருந்தனர்.

கடல் வழியாக வருகை தந்த மீனவர்கள் வன்னியில் இருந்து தமது மீன்பிடிக் கலங்கள் மற்றும் தமது மீன்பிடி வலைகள் என்பவற்றைக் மீளவும் கொண்டுவந்ததுடன் அங்கு தாம் கொள்வனவு செய்த அரிசி, மா, சீனி, தேங்காய் ஆகியவற்றையும் கொண்டுவந்துள்ளார்கள்.

படையினரின் விசாரணையைத் தொடர்ந்து இம்மீனவர்கள் அனைவரும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் குருநகர் கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரினதும் வாக்கு மூலங்களைப் பெற்று தம்மிடம் ஒப்படைப்பதுடன் அனைவரையும் மீளவும் தம்மிடம் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு குருநகர் இறங்குதுறைக்கு அழைத்து வந்து மீனவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுச் செல்லுமாறு படையினர் கோரியதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தச் சங்கத் தலைவர் அ.பிறேமேன் தெரிவித்தார்.

கரை திரும்பிய இம்மீனவர்கள் அனைவரும் நேற்றுக்காலை 11 மணியளவில் தமது உறவினர்களுடன் இணந்துகொண்டனர். வன்னியில் விடுதலைப் புலிகளின் அனுமதி பெறாமல் தாம் இரகசியமாகவே குருநகருக்கு வந்ததாக இம்மீனவர்கள் தெரிவித்தனர். (1-51-88-17)

மழை வெள்ளம், மண்சரிவு அனர்த்தத்தினால்

# நாடு முழுவதும் 22 பேர் மரணம் மூன்று லட்சம் பேர் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக். 31

வெள்ளம், மண்சரிவு காரணமாக நாடு முழுவதும் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மூன்று லட்சத்து 18 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஒருகோடியே பத்து லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி நேற்றுத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் கடந்த ஒருவார காலமாக பெய்துவரும் மழை காரணமாக வெள்ளமும் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. மண்சரிவு, வெள்ளத்தில் சிக்கி 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதேவேளை, புத்தளம், கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக 69 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று லட்சத்து 18 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, மழை தணிந்துவிட்டதால் நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் வடிந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று தெரிவித்தது. (ஐ)

# சந்திரிகா நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக்.31

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் சபையின் தெற்காசியப் பிரிவிற்கான ஆணையாளர் நாயகம் பதவி ஏற்ற பின்னர் முதற்தடவையாக நேற்றுக்காலை இலங்கை வந்துள்ளார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த அவர், விமானநிலையத்தின் அதிவிசேட பிரமுகர்களுக்கான (வி.வி.ஐ.பி) வாயில் ஊடாக வெளியேற முற்பட்டபோது அதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் அவர் சிறிதுநேரம் அங்கு தாமதித்து நின்று பின்னர் சாதாரண பயணிகளுக்கான வாயில் ஊடாகவே வெளிச் சென்றார் என்று தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனது பதவிக்காலம் முடிந்த கையோடு தனக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கூறி லண்டனில் சுமார் ஒரு வருட காலம் தங்கியிருந்தமை தெரிந்ததே.

நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சிரேஷ்ட அமைச்சர்கள், சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராயவுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

சந்திரிகா குமாரதுங்க அத்தனகல்ல ஹொரகொல்லையிலுள்ள தனது பெற்றோர்களின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவுக்கு ஐ.நா. பதவி வழங்கியதற்கு ஆசிய மனித உரிமை அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்துருக்கொண்டான் பகுதியில் இரு இளைஞர்களின் சடலங்கள்

கொழும்பு, ஒக். 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்துருக்கொண்டான் கிராமத்தில் இரு இளைஞர்களின் சடலங்களைப் பொலிஸார் திங்கட்கிழமை மீட்டெடுத்துள்ளனர்.

இவ்விருவரினதும் சடலங்களும் திங்கள் மாலை 3.30மணியளவில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இரு சடலங்களில் ஒன்று தன்னாமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கே.கிறிஸ்டன் (வயது-28) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மற்றைய சடலம் இதுவரை உறவினர்களினால் அடையாளம் காணப்படவில்லை. சடலங்களின் கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. இரு சடலங்களிலும் தலை, உடல் மற்றும் நெஞ்சுப் பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்படுகின்றன.

மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

**நாளை**

ஐப்பசி 15
புதன்கிழமை
01.11.2006
திதி : தசமி
காலை : 06.29
நட்சத்திரம் : சதயம்
பிற்பகல் : 04.10
சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 01.33

# படுகொலைகள்

## நகரப் பகுதியில்...

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.நகரப்பகுதியில் அங்காடி வியாபாரம் செய்யும் இளைஞர் ஒருவர் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கைதடி கிழக்கைச் சேர்ந்த நவரத்தினம் மகிந்தன் (வயது 17) என்பவரே மரணமானவராவார்.

அங்காடி வியாபாரத்தில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச்சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1-15-78-79-202)

## நல்லூரில்...

யாழ்ப்பாணம், ஒக்.31

நல்லூர் ஆலய மேற்கு வீதியில் நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாரியம்மன் வீதி, முடமாவடியைச் சேர்ந்த இராமையா கிருஷ்ணகுமார் (வயது 38) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

பாடசாலையில் பிள்ளையை கூட்டி வருவதற்காக அவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பி விட்டனர் என்று சொல்லப்படுகிறது.

சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (1-78-79)

# ஆலயம் உடைத்து திருட்டு

கல்வியங்காடு, ஒக்.31

கல்வியங்காடு 3ஆம் கட்டையில் அமைந்துள்ள வீரபத்திரர் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு வேளையில் உட்புகுந்த திருடர்கள் ஆலய மூலஸ்தானத்தை உடைத்து மூலஸ்தானத்திற்குள்ளிருந்த பெறுமதி வாய்ந்த நகைகள் மற்றும் விக்கிரகங்களுக்கு அணிவிக்கப்படும் தங்கத்திலான அங்கிகள் ஆபரணங்கள் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருள்களும் களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் இரவு வேளை ஆலயத்தில் சத்தங்கள் கேட்டதாகவும் -

ஊரடங்கு வேளையாதலால் மக்கள் எவரும் வீட்டுக்கு வெளியே செல்லவில்லை எனவும் - அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (1-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கற்றாங்கு ஒழுகுக

# ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

பணி ஓய்வுபெறும்

## அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்களின்

# சேவை நயப்பிதழ்



## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கடந்த பத்தாண்டுகளாக அதிபராகச் சேவையாற்றிய திரு.வ.ஆறுமுகம் அவர்கள் பணி ஓய்வு பெறுவதையிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆசிரியராக, அதிபராக எனப் பல தளங்களில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் பணியாற்றியுள்ள திரு. வ.ஆறுமுகம் அவர்கள் சிறந்த கல்வித் தொண்டர். 'மம்மர்அறுக்கும் மருந்து' ஆகிய கல்வியை மாணவச் செல்வங்கள் உரிய வழிகளில் பெற்றுக்கொள்ள அளப்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார். குறிப்பாகக் கல்லூரியின் தர்மசாதனங்களைப் பரிபாலிப்பதில் நேர்மையானவராகவும் நம்பகத் தன்மை மிகுந்தவராகவும் விளங்கியுள்ளார். எமது கல்வி வலயப் பாடசாலைகளை வழிநடத்தும் அதிபர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக திரு.வ. ஆறுமுகம் அவர்களைக் கொள்ளலாம்.

**வே.தி.செல்வரட்ணம்**
தலைவர், கல்லூரித் தர்மகர்த்தா சபை (பதவி வழி),
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

## கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் அகவை அறுபதை எய்தியதால் ஓய்வுபெறுகிறார். உடல் நலத்திலும் உளநலத்திலும் ஒரு துடிப்பான இளைஞனாகச் செயற்படும் இவரா ஓய்வு பெறுகிறார்?

திரு.வ.ஆறுமுகம் அவர்கள் பதவி வழியால் மாத்திரமே ஓய்வு பெறுகிறார். மறுபக்கத்தில் கல்லூரியின் பழைய மாணவராகிய இவரது வழிகாட்டல் கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைக்கும் எனப் பலரும் எதிர்பார்த்துள்ளனர்.

சிறந்த ஆளுமை மிக்க அதிபராக விளங்கி கல்விசார் நிலையிலும் பௌதிக வளம்சார் நிலையிலும் கல்லூரியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திய திரு.வ. ஆறுமுகத்தின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**இ.சிவஞானசுந்தரம்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய்.

## பாடசாலையே தன்னுயிராக...

பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம், தர்மகர்த்தா சபை ஆகியவற்றினை ஒருங்கிணைத்து அவற்றின் தொழிற்பாடுகளை உச்சநிலைக்கு வளர்த்தெடுத்ததுடன், பாடசாலைச் சமூகத்தையும் விழிப்படையச் செய்த பெருமையைப் பெற்றவர் அதிபர் ஆறுமுகம் அவர்கள்.

வலிகாம ஒட்டுமொத்த இடம்பெயர்வின்போது தென்மராட்சியில் மட்டுவில் பகுதியில் இருந்து 1995 ஆம் ஆண்டு எமது பாடசாலையின் அதிபர் பதவியினைப் பொறுப்பேற்றுக்கொண்ட இவர், பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கூடாக இன்றைய நிலைக்கு இப்பாடசாலையை மிளிரச் செய்துள்ளார்.

அவர் ஓய்வுபெறும் காலம் எமது பாடசாலையின் பவளவிழா ஆண்டு ஆகும். பாடசாலையின் பல்வேறு பதிவுகளை எதிர்காலத்துக்கென ஆவணப்படுத்திய பெருமையும் இவரையே சாரும். பவளவிழா மணிமண்டபம், சோமாஸ்கந்தன் ஆலயம், திருவள்ளுவர் மையம் ஆகிய செயற்பாடுகளுடன் பவளவிழா இறுதி நிகழ்வு, பவளவிழாச் சஞ்சிகை வெளியீடு, முன்னாள் பாடசாலையின் பணியாளர்கள் கௌரவிப்பு ஆகியன யாவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறைவுறாது இருப்பினும் ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் தான் தொடங்கிய பணிகள் தனது ஓய்வு காலத்திலும் செவ்வனே நிறைவுபெற ஆக்கமும் ஊக்கமும் தந்து தொடர்ந்தும் முன்னின்று உழைக்க வேண்டுமென்று நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

**கு.வாகீசன், பிரதி அதிபர்.**

## கல்லூரியின் பொற்காலம்

மாணவர்களின் கல்விநிலை தொடர்பாக பெற்றோரை அழைத்து கலந்துரையாடும் போதும்கூட பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் தெரியப்படுத்துவதுடன், அவர்களின் அரிய நல்ல கருத்துகளையும் கேட்டு அதற்கேற்ற சிறந்த முறையில் பாடசாலையை நிர்வகிக்கும் பெருமை ஓய்வுபெறும் அதிபர் அவர்களையே சாரும். கல்லூரியில் இரு தசாப்தகாலமாக அளப்பரிய சேவையாற்றி, கல்லூரியின் பெருமைமிக்க வளர்ச்சிக்கு மிகுந்த உதவி புரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மனதாரப் பாராட்டுகிறது. இவர் பணிசெய்த காலம் கல்லூரியின் பொற்காலமாகும். சகல வளங்களையும் கொண்ட கல்லூரியாக இப்பாடசாலையை, உயர் நிலைக்குக் கொண்டுவர உழைத்த திருவாளர் வயிரவநாதன் ஆறுமுகம் அவர்களை வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக் காலத்திலும் உயரிய வழிகாட்டல்களைக் கல்லூரிக்கு வழங்கி உதவ வேண்டுமென வேண்டிநிற்கிறோம்.

**வே.தருமலிங்கம்,**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



### எங்கள் அதிபர்

- பிறப்பு : 01.11.1946, ஆவரங்கால்
- தந்தை: அமரர் ஆறுமுகம் வயிரவநாதன் (புத்தூர்)
- தாய்: அமரர் வயிரவநாதன் தெய்வானைப்பிள்ளை (ஆவரங்கால்)
- வாழ்க்கைத்துணை: திருமதி ருக்மணிதேவி ஆறுமுகம்
- ஆரம்பக் கல்வி: ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- இடைநிலைக் கல்வி: ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
- உயர்கல்வி: பேராதனைப் பல்கலைக்கழகம்
- பட்டப்பின் கல்வி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- செய்முறை காட்டுநர்(Demonstrator)1969-1970: பேராதனைப் பல்கலைக்கழக பௌதிகத்துறை
- 1970-1972 : பட்டதாரிப் பயிலுநர், வலி.கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை
- ஆசிரிய நியமனம்: 28.07.1972 நு/அல்மின்ஹஜ் மு.ம.வி., ஹப்புகஸ்தலாவ
- தொடர் கல்விச் சேவை:

28.01.1975 - 13.06.1986: ஆசிரியர், கொழும்பு றோயல் கல்லூரி.
14.06.1986-19.11.1995: ஆசிரியர், பகுதித் தலைவர், பிரதி அதிபர் ஸ்ரீ.சோ.க.
20.11.1995-31.10.2006: அதிபர் ஸ்ரீ சோமாஸ்காந்தக் கல்லூரி

## கல்லூரிக்காகவே வாழும் பெருமகன்

எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களுள் ஒருவரும் கல்லூரியின் அதிபராகக் கடந்த பத்தாண்டுகளாக அளப்பரிய சேவையாற்றியவருமாகிய திரு.வ.ஆறுமுகம் அவர்கள் கல்லூரியில் தனித்துவமான இடத்தைப் பெறுகிறார்.

இவரது காலப்பகுதியில் ஏற்பட்ட கல்வி மற்றும் பௌதிக வளர்ச்சிகளைப் பட்டியலிடலாம். பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையிலும், 5ஆம் தரப் புலமைப்பரிசு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்ட வீதசமான அதிகரிப்பு, பல்கலைக்கழகத்திற்குப் புகுந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊக்குவிப்புத் தொகை, கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கான விசேட வகுப்புகள், கல்லூரியில் இருந்து விலகிய மாணவர்களுக்காகக் கல்லூரிச் செலவில் இடம்பெறும் தொழில் கற்கை நெறிகள் போன்றன குறிப்பிடத்தக்கவையாகும். விளையாட்டுத் துறையில் - மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் பெற்ற வெற்றிகளின் பின்னணியிலும் அதிபர் கடுமையாக உழைத்திருக்கிறார்.

பௌதிக மாற்றங்களில் பாடசாலை வாயிலை பிரதான வீதிக்கு அமைப்பதற்கான காணிக் கொள்வனவு, புதிய கட்டடங்கள், பேணப்படவேண்டிய பழைய கட்டடங்களைப் பழைமை சிதையாது புதுப்பித்தல், புதிய கோயிலை அமைத்தல், இன்னும் சொல்லப் போனால் காலம்சென்ற குமாரசுவாமி அதிபருக்காக எழுப்பப்படுகின்ற மணிமண்டபம் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். நினைவிலும் கனவிலும் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியவர் இளைப்பாறிச் செல்லும் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

**க.இராசதுரை**
செயலாளர், பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்),
செயலாளர், பவளவிழாச் சபை.

## ஆசிச் செய்தி

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிவரும் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை நல்லாற்றுப்படுத்திய அதிபர் பெருமகன் அகவை அறுபதை எய்தித் தனது பதவியிலிருந்த ஓய்வுபெறுகிறார்.

சமய விழுமியங்களை முறையாகக் கைக்கொள்வதன் மூலம் மாணவர் மத்தியில் உயரிய ஒழுக்கத்தைப் பேணலாம் என நம்பி அதில் வெற்றி கண்டவராக அதிபர் அவர்கள் திகழ்கிறார். கல்லூரியில் இடம்பெறும் அறுபத்து மூவர் குருபூசைகள், திருவாசக விழா, வாணிவிழா, நாவலர் விழா என அனைத்துச் செயற்பாடுகளும் சைவத்தைக் காக்கும் கலைக்கூடமாக எமது கல்லூரியை விளங்கச் செய்துள்ளன.

நிறுவுநர் மழவராயர் கந்தையா வள்ளலாரின் பிறந்த தினத்தன்று எமது ஆலயத்திலிருந்து நிறுவுனரைக் கல்லூரிக்கு எழுந்தருளச் செய்து பரிசளிப்பு நிகழ்வையும் நடத்தி யாவருக்கும் மதியவிருந்தளித்து அத்தினத்தையே அர்த்தமுள்ள தினமாக மாற்றிய உத்தமராக அதிபர் விளங்குகிறார். ஓய்வுக் காலத்திலும் கல்லூரிக்காகப் பணி செய்து ஷேமமாய் வாழ விசாலாட்சி அம்பிகா சமேத விசுவநாத சுவாமியின் திருவருள் கிடைப்பதாக.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ சாமி.சோமசுந்தரக் குருக்கள்**
பிரதம குரு, புத்தூர் சிவன் தேவஸ்தானம்.

## நிறுவுனரின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர்

எங்கள் கல்லூரியின் நிறுவுனர் அமரர் மழவராயர் கந்தையா வள்ளல் கண்ட கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுத்த உத்தமர்கள் வரிசையில் அதிபர் வ.ஆறுமுகம் சிறப்பிடம் பெறுகிறார். கல்வி சார் அபிவிருத்தியாயினும் சரி, பௌதிக வள விருத்தியாயினும் சரி ஒரு நகரப் பாடசாலைக்குரிய மிடுக்குடன் எமது கல்லூரி சிறப்புற்று விளங்குகின்றது.

நிறுவுனர் கல்லூரிக்கென விட்டுச் சென்ற சொத்துக்களை மிக நேர்மையுடன் பரிபாலனம் செய்த பெருமகன். இத்தர்ம சாதனங்களிலிருந்து கிடைத்த வருவாய் மூலம் கல்லூரியில் இருந்து விலகிய மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிகள், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உணவு வழங்கி மாலை நேரத்தில் நடத்தப்பெறும் விசேட வகுப்புகள், ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலயப் பரிபாலனம் எனப் பல செயற்பாடுகளைச் செவ்வனே ஆற்றுப்படுத்தியுள்ளார்.

எங்கள் தர்மகர்த்தா சபை தனது வாழ்நாள் உறுப்பினராக அதிபர் வ.ஆறுமுகம் அவர்களை உள்வாங்கியிருக்கின்றமை அதிபரின் நேர்மைக்கும் அர்ப்பணிப்புக்கும் கிடைத்த அங்கீகாரம் ஆகும்.

**தர்மகர்த்தா சபை,**
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

## அர்ப்பணிப்பு உணர்வுள்ளவர்

அதிபர் திரு.ஆறுமுகம் அவர்கள் எமது கல்லூரியில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்லூரியின் அபிவிருத்திக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து தன்னாலியன்ற அதி உச்ச சேவையைத் தந்த ஒரு பெருமகன். இருவருடைய காலத்தில் பாடசாலையில் கூடுதலான பௌதிக தேவைகள் நிறைவு பெற்றன. சரியான திட்டமிடலுடனும் அர்ப்பணிப்புடனும் சிக்கனத்துடனும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து நிறைவுசெய்தவர். இவருடைய காலத்தில் ஆசிரியர்களை மட்டும் அங்கத்தவராகக் கொண்டியங்கிய ஆசிரியர் கழகம் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய நலம்புரிக் கழகமாக மலர்ந்தமை ஒரு சிறப்பம்சமாகும். அதிபர் அவர்களுடைய சேவை எமது பாடசாலைக்கு என்றென்றும் தேவை என்பதை அனைவரும் உணர்வர். சிறந்த ஆலோசகராக, வழிகாட்டியாக, நலம்விரும்பியாக, பல்வேறு வழிகளிலும் தொடர்ந்தும் எமக்கு அவர் உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர் அவர்கள் எல்லா நலனும் பெற்று நிறைவுற வாழ எல்லாம்வல்ல சோமாஸ்கந்தப் பெருமான் அருள் புரிய வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

**நலம்புரிக்கழகம்,**
யா/சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

மலரமைப்பு:
**நலம்புரிக்கழகம்,**
**பவளவிழாச் சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண் தயாரிப்பதற்கு உப பொருள்கள் இல்லை; அதனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உற்பத்தி

## வடமராட்சி பேக்கரி உரிமையாளர்கள் விளக்கம்

உடுப்பிட்டி,ஒக்.31

பாண் தயாரிப்பதற்குத் தேவையான 'ஈஸ்ற்', சீனி, தேங்காய் எண்ணெய் போன்ற உப பொருள்கள் இல்லாமையே வடமராட்சிப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட பாண் உற்பத்தி செய்யப்படுவதற்குக் காரணமாகும்.

வடமராட்சிப் பகுதி பேக்கரி உரிமையாளர்கள் இவ்வாறு தமது நிலை குறித்து தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டின் அசாதாரண சூழ்நிலையால் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் இல்லாமையால் பெருமளவான மக்கள் பாண் வாங்குவதில் வழமையான காலத்தை விட இப்போது முனைப்புக் காட்டி வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில நாள்களாக குடாநாட்டின் பேக்கரிகளில் பாணுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

தட்டுப்பாட்டுக்கான காரணம் குறித்து வடமராட்சி பேக்கரி உரிமையாளர்களிடம் வினவியபோதே அவர்களில் மிகப் பலரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கருத்துக் கூறுகையில்-

எமக்கு வழங்கப்படும் மாவின் அளவு தற்போது குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு நாளைக்கு விநியோகிக்க வேண்டிய பாணின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்குத் தேவையான அளவு பாணை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியவில்லை.

இவை தவிர, பாண் தயாரிப்பதற்கு வேண்டிய உப பொருள்கள் எவையும் வழங்கப்படுவதில்லை. இதனால் நாம் கையிருப்பில் உள்ள பொருள்களைக் கொண்டே பாண் தயாரிப்பில் ஈடுபடுகின்றோம். அதனாலேயே பற்றாக்குறை உண்டாகியுள்ளது - என்றனர். (202-155)

## வலி.தென்மேற்கு வயல்களில் நாற்று நடுகை ஆரம்பமாகியது

வலி.தென்மேற்கு,ஒக்.31

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பலத்த மழையை அடுத்து வலி. தென்மேற்கு விவசாயிகள் தமது வயல் காணிகளில் நாற்று நடுகையை மேற்கொண்டு வருகின்றனர். மழைவெள்ளம் காணிகளில் இல்லாத நிலையில் கிணற்றிலிருந்து நீர் இறைத்தே பெரும்பாலான விவசாயிகள் நாற்று நடுகையில் ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை - பண்டத்தரிப்பு, மாதகல் சில்லாலை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் நாற்று நடுவதைற்கு பெண் கூலித் தொழிலாளிகளுக்கு பற்றாக்குறை நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (135)

# மிருசுவில் உப அஞ்சலக இடமாற்றத்தால் வயோதிபர்கள் உட்பட மக்கள் பாதிப்பு

தென்மராட்சி,ஒக்.31

மிருசுவில் உப தபாலகம் மிருசுவில் வடக்குப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் தற்போது இயங்குகின்றது.

இதனால், வயோதிபர்கள் உட்பட மக்கள் பலரும் தபாலகத்திற்குச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி, உப தபாலகம் முன்னர் கொடிகாமத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. மிருசுவில் தெற்கு, உசன், கெற்பேலி, பாலாவி, தவசிகுளம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த தபாலகத்தைப் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால், தற்போது இந்த உப தபாலகம் மிருசுவில் வடக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டதால் மக்கள், 6 மைல்களுக்கு குறுக்கு ஒழுங்கைகள் ஊடாக நடந்து செல்ல வேண்டியுள்ளதாகவும் -

தற்போது பெய்துவரும் மழையால் ஒழுங்கைகள் அனைத்தும் வெள்ளம் நிறைந்துள்ளதால் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் வயோதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பயன்பெறக் கூடிய இடத்தில் இந்த உப தபாலகத்தை நடத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202)

# கடலில் போட்ட வலைகளை மீள எடுக்க முடியாத நிலை

## கைதடி, நாவற்குழி மீனவர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தென்மராட்சி தோயிலாக் கண்டி கடல் பகுதியில் போட்ட வலைகளை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கடற்றொழிலாளர் கவலை தெரிவித்துள்ளனர்.

கைதடி, நாவற்குழி தெற்கு பகுதிகளைச் சேர்ந்த 50 வரையான மீனவர்கள் ஒகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் படையினரின் அனுமதியுடன் தொழிலுக்காகக் கடலில் வலைகளைப் போட்டிருந்தனர்.

இந்த வலைகளையே கடலில் இருந்து எடுக்க முடியாத நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிக்கான கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆழிப் பேரலை அனர்த்தத்தையடுத்து அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்ட 35 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளே கடலில் விடப்பட்டுள்ளன என்று கவலை தெரிவிக்கின்றனர். (203-68)

## அனுமதியின்றி மரம் தறித்தல் இளவாலையில் தொடர்கிறது

வலி.தென்மேற்கு,ஒக். 31

இளவாலை,மாரீசன்கூடல் மற்றும் மாதகல் ஆகிய பகுதிகளில் திருட்டுத்தனமாக மரங்கள் தறிக்கப்பட்டு விறகுக்காக எடுத்துச் செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குச் சொந்தமான வளவுகளிலும் ஆள்கள் இல்லாத வீட்டு வளவுகளிலும் நிற்கும் வேம்பு, பூவரசு, இப்பில் இப்பில்,மஞ்சவெண்ணா போன்ற மரங்கள் இவ்வாறு கண்டபடி தறிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.நகர், மானிப்பாய் போன்ற இடங்களுக்கு சைக்கிளில் கட்டிக்கொண்டுபோய் அதிக விலைக்கு இந்த விறகுகள் விற்கப்பட்டு வருகின்றன. இதனால் பயன்தரு மரங்கள் இப்பகுதிகளில் முற்றாக அழிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (135)

# விவசாய விரிவாக்கல் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.31

உலக உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஜக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அனுசரணையுடன் குடாநாட்டில் 3 விவசாய விரிவாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என விவசாயத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

சிறுதானியம் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

500 பயனாளிகளுக்கு கௌபீ உள்ளீடுகளும், 200 பயனாளிகளுக்கு குரக்கன் பயிர்செய்கை திட்டத்தின் கீழ் தேவையான உள்ளீடுகளும், வீட்டுத் தோட்ட ஊக்குவிப்புக்காக 500 பயனாளிகளுக்கு உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளன.

விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு மண்வெட்டிகள், கிண்டிகள், முள்ளுகள் போன்ற விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. - எனத் தெரிவிக்கப்பட்டது. (202-88)



யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள செலிங்கோ காப்புறுதி நிறுவனம், தீ அபாயக் காப்புறுதி நிதியாக இருவருக்கு 2 லட்சத்து 52 ஆயிரத்து 482 ரூபா வுக்கான காசோலைகளை வழங்கியுள்ளது. மேற்படி காசோலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை அதன் அலுவலகத்தில் வைத்து பிராந்திய முகாமையாளர் கே.தவசீலன் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரான்லி றோட் ஸ்ரீநதியா கடைத் தொகுதி உரிமையாளர் என். சத்தியசீலனுக்கு ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 482 ரூபாவுக்கான காசோலையை யாழ். கிளை நிர்வாகப் பொறுப்பாளர் ஜே.ஜே. றொஷான் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் இது. (படங்கள்: லக்ஷ்மன்)

## குடாநாட்டில் அதிகரித்துவரும் திருடர்களின் கைவரிசை

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டில் அண்மைக் காலமாக திருடர்களின் கைவரிசை அதிகரித்து வருகின்றது.

இரவு நேரங்களில் நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம், தற்போது பெய்துவரும் பருவமழை போன்றவற்றைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

வடமராட்சிப் பகுதிகளில் கால்நடைகள் மற்றும் நகைகள் அதிகளவில் திருட்டுப் போயுள்ளன.

தென்மராட்சியிலும் கால்நடைகள் திருட்டுப் போவதுடன் உணவுப் பொருள்களும் திருட்டுப் போகின்றன. (202-31-70)

## ஆயுள்வேத வைத்தியசாலை இடம்மாற்றம்

சாவகச்சேரி, ஒக்.31

சாவகச்சேரி பிரதேச சபையால் மிருசுவில் உப பணி மனையில் நடத்தப்பட்டு வந்த சித்த ஆயுள்வேத வைத்திய நிலையம் அப்பகுதியில் இருந்து தற்காலிகமாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையம் தற்பொழுது மீசாலை புத்தூர்ச் சந்தியில் தனியார் வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (202-31)

## கட்டாயக் கல்விக்குழு வலுப்படுத்தல் செயலமர்வு

தென்மராட்சி, ஒக்.31

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கட்டாயக் கல்விக்குழுவை வலுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள இந்தச் செயலமர்வில் கொடிகாமம், வரணி, மிருசுவில் உள்ளிட்ட தென்மராட்சி கிழக்குப் பிரதேச கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202)

# பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரம், மருந்து போதிய அளவு இல்லை

## விவசாயிகள் தரப்பில் பெருங் கவலை

உடுப்பிட்டி,ஒக்.31

பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரம், பசளை, மருந்துவகைகள் இன்மையால் விவசாயிகள் பெரும் கஷ்டமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துள்ள மழையை அடுத்து விவசாயிகள் நெற்செய்கை, சிறுதானியச் செய்கை போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

இருந்த போதும் உரம், பசளை, மருந்து வகைகள் போதிய அளவில் இன்மையால் விவசாயிகள் மனம் சோர்வடைந்துள்ளதாக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - போதிய அளவில் விதையினங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (203-155)

## விசேட பரீட்சை

ஜி.சீ.ஈ. சாதாரண தர சங்கீத செய்முறைப் பரீட்சையில் தோற்ற முடியாத தென்மராட்சி வலய மாணவர்களுக்கான விசேட பரீட்சை நாளை புதன்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற செய்முறைப் பரீட்சையில் தோற்றத் தவறிய சகல மாணவர்களையும் நாளை நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.(202)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் மலசலகூடம் அமைக்க சுகாதாரத் திணைக்களம் உதவி

சாவகச்சேரி, ஒக்.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் மலசலகூட வசதி இல்லாதவர்களுக்கு அதனை அமைப்பதற்காக சுகாதாரத் திணைக்களம் உதவித் தொகையாக தலா 5 ஆயிரம் ரூபாவை வழங்கி வருகிறது.

இப்பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் அண்மையில் கொடிகாமம் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 27 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன என பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சுதாகர் தெரிவித்தார். (202- 31)

## மரக்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்வு

அரியாலை, ஒக்.31

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் கிடுகிடுவென உயர்வடைந்துள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 150 ரூபாவாகவும் பயிற்றங்காய் 100 ரூபாவாகவும் பாகற்காய் 140 ரூபாவாகவுகம் பூசணி, வெண்டக்காய் போன்றன கிலோ 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மழைகாலம் காரணமாக மரக்கறிகளின் விளைச்சல் குறைவாக உள்ளது. இதனாலேயே விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203-17)

# வாய்க்கால்கள் புனரமைக்கப்படவில்லை; வீதிகள், ஒழுங்கைகளில் மழைவெள்ளம்

கரவெட்டி,ஒக்.31

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள வாய்க்கால்கள் உரியமுறையில் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் மழை வெள்ளம் ஓடாது வீதிகள், ஒழுங்கைகள் எங்கும் தேங்கி நிற்கின்றது.

இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல வருடங்களாக வீதி, வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் எழுத்து மூலமாக தெரிவித்தபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-70)

## சிமெந்து விலை உயர்வு

வடமராட்சியில் சிமெந்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அசாதாரண சூழ்நிலைக்கு முன்னர் 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த சிமெந்து தற்போது ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப் பட்டு வருகின்றது.

கப்பல் மூலம் சிமெந்தை இறக்குமதி செய்வதால் கப்பல் தரிப்பிடத்திற்கானவரி, இறக்குமதிக்கூலி, தொழிலாளர்களுக்கான கூலி போன்றவற்றைக் கருத்திற்கொண்டே அதனை அதிகரித்த விலையில் விற்பனை செய்வதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (202- 70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண பொன்விழா யூபிலி

31.10.2006



**திரு.திருமதி பஸ்ரியாம்பிள்ளை இம்மானுவேல்**

**அவர்கள் தமது திருமண வாழ்வின் கொடைகளுக்காக இன்றைய தினத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் சகிதம் இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள்.**

155, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(54763)



# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் ஏகாதசித்தீர்த்தம் நாகேஸ்வரம் - அளவெட்டி

**நாளை(01.11.2006)புதன்கிழமை காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 9 மணிக்கு நி.பிறேம்நிஷாந்தன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன்) அவர்களின் சொற்பொழிவும் முற்பகல் 10 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

*நாகேஸ்வரம்,*
*அளவெட்டி.*
(54690)
**பொ.ப.சபை.**

# றப்பிட் றிசல்ற் கல்லூரி

கச்சாய் வீதி — சாவகச்சேரி

**O/L வகுப்புக்கான**
**40 நாள் வினா-விடை வகுப்புகள்**

தென்மராட்சியில் புகழ் பூத்த ஆசிரியர் பலரின்
ஒன்றிணைந்த சங்கமம்
ஆரம்பம் 01.11.2006 [புதன்] 3 p.m.
வெற்றிக்கு வழிகாண விரையுங்கள்

(54791)
அ.வாசுதேவா
இயக்குநர்.

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

**தோற்றம்**
**01 - 12 - 1936**



**மறைவு**
**14 - 11 - 2002**

*அமரர்* **சின்னக்குட்டி சண்முகராசா**

திதி : 31.10.2006

சிறு தளிராய் நின்ற எம்மை
பெரு விருட்சம் ஆக்கி விட்டீரே - இன்று
எங்களை எல்லாம் நோக விட்டு
சென்று விட்டீர் அப்பா!
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் மறாது அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*முகவரி:*
**இளவாலை வேரவில்,**
**இளவாலை.**
(54805)
*உங்கள் நினைவுடன்,*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# எம் விழி சொரியும் அருவிகளுடன் உன் ஓராண்டு

**மண்ணின் மடியில்**
**11 - 04 - 1957**



**விண்ணின் மடியில்**
**31 - 10 - 2005**

## அமரர் தம்பு அன்ரன் சிவலிங்கம்

**(பலாலி தெற்கு, வசாவிளான்)**

**"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"**
**உன் ஆன்மாவை விட்டு உன் ஆருயிர் பிரிந்து**
**ஆண்டொன்று ஓடியதே. ஆனபோதும் ஆறவில்லை**
**உன் உதிரத்து உறவுகளின் நெஞ்சக் குமுறல்கள்**
**என்றும் உமது ஜீவன் நித்தியத்தில் இளைப்பாற**
**எல்லாம் வல்ல குழந்தை யேசுவிடம் வேண்டி நிற்கும்**

(54796)

*இல.20/1,பேக்கரி லேன்,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
**உமது மனைவி, பிள்ளைகள், மாமி, மச்சான் குடும்பம்.**

# மரண அறிவித்தல்கள்

## செல்லர் தங்கராசா



(முன்னாள் தலைவர் - கட்டைவேலி, நெல்லியடி, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம்)

உடுப்பிட்டி, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் தங்கராசா அவர்கள் 28.10.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மாதுரிதேவியின் அன்புக் கணவரும் தங்கேஸ்வரன்(கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), மாலினிதேவி (பிரான்ஸ்), வதனா(லண்டன்), வனிதா, அனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் மௌனதாஸ் (பிரான்ஸ்), விஜயதாஸன்(பிரான்ஸ்), ஜெயக்குமார்(லண்டன்), துஷாந்தினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடத்தப்பட்டு பூதவுடல் மயிலந்தனை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*கம்பர்மலை.*
(54806)
**இரத்தினசிங்கம் செல்வரூபி (லண்டன்).**

## மனுவேற்பிள்ளை அல்பிறட் மரியநாயகம்



(முன்னாள் இ.போ.ச. சாரதி, அளவெட்டி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியில் வசித்தவருமான அல்பிறட் மரியநாயகம் அவர்கள் 29.10.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - எலிசபெத் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் மேரியேற்றூட்டின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியதிரேஸ், செல்லத்துரை, பூராசா, செல்லா, தேவா ஆகியோரின் சகோதரனும் யோசேப்பின் மைத்துனரும் அன்ரன் (ஜேர்மனி), ரவி (ஜேர்மனி), மோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெசிந்தா, சுவேந்தி, மெலானி ஆகியோரின் மாமனும் அனிற்றா, டிலான், டானியல், நிலக்சிதா, நிருஷிகா, மரின்சியா, ஆன் மரீனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அளவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*அலுக்கை,*
*அளவெட்டி.*
(54803)
**மேரி யேற்றூட்(மனைவி), மோகன்ராஜ்(மகன்).**

## அப்புக்குட்டி சரவணமுத்து

நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சரவணமுத்து நேற்று (30.10.2006) திங்கட்கிழமை அதிகாலை நெடுந்தீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி - சின்னாச்சி தம்பதியரின் புதல்வரும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் கமலாதேவி(கிளிநொச்சி), கனகலட்சுமி (கிளிநொச்சி), சந்திரபாலன்(பிரதேசசபை, கிளிநொச்சி), நல்லையா(மல்லாவி), பேரின்பநாதன் (கோட்டக்கல்வி அலுவலகம் -வேலணை), பாக்கியலட்சுமி(நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவீந்திரன்(இரசாயனக் கூட்டுத்தாபனம் -பரந்தன்), டொன் பொஸ்கோ (கிளிநொச்சி), வசந்தகுமாரி (உதவிக்கல்விப் பணிப்பாளர், துணுக்காய்), மல்லிகாதேவி(மல்லாவி), சசிகலா(ஆசிரியை, வட்டு. இந்துக் கல்லூரி), கிருபாகரன் (நெடுந்தீவு ப. நோ. கூ.சங்கம்) ஆகியோரின் பாசமுள்ள மாமனும் நாகம்மா(பாண்டியன்குளம்), காலஞ்சென்ற சின்னத்தம்பி (கல்மடு) ஆகியோரின் சகோதரரும் கிருஷன், தர்ஷன், டின்சி, கஜாநிதி, அஜித், கிரிஷா, சுவேதன், சங்கவி, சங்கவன், பிறையாளன், அருள்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2006)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, நெடுந்தீவு கிழக்கு கட்டுராமன் சல்லி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*நெடுந்தீவு11.*
(சி.51240)
**ச.பேரின்பநாதன் (கோட்டக்கல்வி அலுவலகம் -வேலணை).**

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

## குலஆனந்தன் யோகேஸ்வரி



**ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் - நீர்**
**இவ்வுலகில் இல்லையென்பதை நம்பவில்லை**
**பாரினில் பிறப்போரெல்லாம் - விண்**
**செல்வது நியதியாயினும்**
**யாரும் நினையாதபோது நீர் சென்றதேன்?**
**எம் உயிர் உள்ளவரை - உம்**
**நினைவு மறையாது வாழ்வோம்.**

**பிள்ளைகள், குடும்பத்தினர்.**

30/4, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்
(54801)

**நயினை மண்ணில் 12 - 06 - 1957**

**முருகனடியில் 06 - 11 - 200**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரத்தினம் ஜெயசிறி (கலா)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் ஜெயசிறி அவர்கள் நேற்று (30.10.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - பூமலர் தம்பதியரின் மூத்த புதல்வியும் செல்வரத்தினத்தின் (ஆசாரி - ராசு) அன்பு மனைவியும் ஜெயரூபி (லண்டன்), ஜெயமீரா, ஜெயசாளினி, செல்வக்கணேஸ், தனுச்செல்வி, தினேஸ் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயச்சந்திரனின் (லண்டன்) அன்பு மாமியும் அபிஷாந்தின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.10.2006)செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*குறுக்கு வீதி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*
(54799)
**இ.செல்வரத்தினம் (ராசு - கணவர்).**

## கனகரத்தினம் முகுந்தன்



6ஆம் கட்டை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் உக்ரேன் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் முகுந்தன் 23.10.2006 அன்று உக்ரேனில் காலமானார்.

அன்னார் கனகரத்தினம் - காலஞ்சென்ற கமலாதேவியின் மூத்த புதல்வரும் உதயசூரியன் (சுவிஸ்), உதயசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தர்சினி(சுவிஸ்), ஜெயலதாவின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், வீரசிங்கம், இராசதுரை, அன்னலட்சுமி மற்றும் கனகம்மா, இராசமலர் ஆகியோரின் பெறாமகனும் அருந்தவரோகினி, சிவபாலன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.10.2006) உக்ரேனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.*
(54802)
**ச.கனகரத்தினம்(தந்தை), ஐ.கனகம்மா(பெரியதாய்), க.உதயசீலன்(சகோதரர்).**

## சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை(லிப்டன்)



காரைநகர், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா சூசைப்பிள்ளையார்குளம்(இரண்டாம் குறுக்குத் தெரு), இல.183 இல் வசித்தவருமான சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்று (30.10.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிர்மலாதேவி, ரவீந்திரன், சுவர்ணதேவி, மோகேந்திரன், காலஞ்சென்ற யோதிஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கம்(நெடுங்கேணி ), அருணகிரிநாதன்(கம்பளை), இரத்தினேஸ்வரி,தயாளினி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரமேஸ்வரி , இந்திராணி மற்றும் ஆறுமுகம், கந்தசாமி, தனலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடனசபாபதிப்பிள்ளை, ஏரம்பமூர்த்தி, சிவசுப்பிரமணியம், சோமசுந்தரம் மற்றும் இந்திராணி, சரஸ்வதி, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனரும் கஜேந்திரன், சுரேந்திரன், சுபாசினி, நிஷாந்தன், காயத்திரி, திருக்குமரன், லோகேந்திரன், நிவேதன், நிவானி, நிதுஷா, லக்ஷிகா, பவிசா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சனாளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.183, இரண்டாம் குறுக்குத்தெரு,*
*சூசைப்பிள்ளையார்குளம்,*
*வவுனியா,*
*தொ.பே.:-24 222 4824*
(சி.51239)
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 10 |
| 12 | 11 |
| 1912 | 2005 |

அமரர் **பூரணம் சுப்பிரமணியம்**

பாசமுடன் பார்த்திருந்த
பாசமுகம் மறைந்தின்று
ஆண்டொன்று ஆனாலும்
மாறாது எம்மோடு உங்கள்
நினைவு தொடரும்.

றெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.
(தி.பாலகுமார்).
(54787)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 01 |
| 02 | 10 |
| 1964 | 2006 |

# தம்பையா மணிவண்ணன்
(தியாகராசா)

மணி, மணி என்று எல்லோரும்
கூப்பிடுகையில் எங்கே பறந்து சென்றாய்?
கடைசிப்பிள்ளையாய் பிறந்து எல்லோரையும் - விட
ஏன் முதலில் பறந்து விட்டாய்?
உன் மனைவி, பிள்ளைகள், மாமா, மாமி,
உடன்பிறந்தவர், உறவினர் சுதறல்கள்
உன் காதில் கேட்கவில்லையா? கனவுகள்
பல கண்டிருந்தோம் எல்லாம் கானல்நீர்
ஆனதடா மாதம் ஒன்று சென்றாலும் மாறாது எம் துயரம்

சுப்பர் வளவு,
அல்வாய் மத்தி,
அல்வாய்.
(54696)
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

குமாரசாமி வசந்தாதேவி என்பவருடைய வவுனியா இராணுவப் பாஸ் (அனுமதி அட்டை), அடகுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை ஸ்ரான்லி றோட் மக்கள் வங்கிக்கும் ஹற்றன் நஷனல் வங்கிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.வாணி, c/o K.வசந்தாதேவி, இல 32, செங்குந்தாவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.சன்மானம் வழங்கப்படும்.

## நன்றி நவிலல்

**தவமணி வன்னியசிங்கம்**

எமது குடும்பச் செல்வம் தவமணி வன்னியசிங்கம் சிவனடி சரணடைந்த சமயம் உதவிகள் செய்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் எங்களை ஆறுதற்படுத்திய வர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகள்,
சகோதர, சகோதரிகள்

இல.555, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(54788)

## தவறிவிட்டது

கார் செல்ஸ்ராப் மோட்டரின் ஆமெச் சர் கடந்த இரு வாரங்களுக்குமுன் நெல்லியடி பஸ்நிலையத்திலிருந்து ம.மகாவித்தியாலய வீதியூடாக திக்கம் வடிசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி ஜனனி நகைமாடத்தில் ஒப்படைத்துதவவும்(மிகமுக்கியமானது). தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624
(54331)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 02 |
| 10 | 11 |
| 1937 | 1995 |

# அமரர் கமலாதேவி பரஞ்சோதி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: 31.10.2006

நிலையில்லா இவ்வுலகில்
நீங்காத நினைவை மட்டும்
எமக்குத் தந்து விட்டுச் சென்று
ஆண்டுகள் பதினொன்று நிறைவுறும் வேளையிலே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

'சந்திரவாசா',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
(54674)
குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 06 |
| 05 | 11 |
| 1921 | 2000 |

அமரர்
**இளையதம்பி நாகலிங்கம் கந்தையா (E.N.K)**
நாரந்தனை கிழக்கு
திதி - தசமி - 31.10.2006

ஆண்டுகள் ஆறாகி விட்டாலும்
ஆறாது ஐயா உங்கள் பிரிவு
எம் மனங்களில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

55 A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(54778)
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



சின்னத்துரை
கனகராசா



கனகராசா
சிவக்கொழுந்து

எங்கள் குடும்பத்தின் விளக்குகள் அணைந்தாலும் எங்கள் நெஞ்சை விட்டகலாது உங்கள் நினைவுகள்.

இன்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.
(54776)

ராணி, பபா, மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

# நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு ஒன்று



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 01 | 11 |
| 07 | 11 |
| 1949 | 2005 |

அமரர்
# ஞானப்பிரகாசம் ஜெயராஜா பிலேந்திரராஜா
(பொன்ராசா -கோண்டாவில்)
திதி : தசமி 31.10.2006

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை என்துயரம்
கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை உன்னுருவம்
அழியாத கோலமாய் என் உள்ளமதில் வாழ்பவரே!
என் ஜீவன் உள்ளவரை அழியாது உன் நினைவு
நடமாடும் வீட்டில் படமாகிப் போன என் தெய்வமே!
நடமாடும் பிணமாக நான் நிலையின்றித் தடுமாற
கல்லறையும் உனக்கு மகிழ்வுடனே இடம் தந்ததோ?
விண்ணுலகும் உன்னை விரைந்து வரவேற்றதோ?
பார்க்கும் இடமெல்லாம் உன் அன்பு முகம் நிழலாட
பரிதவிக்கும் பேதையின் மனம் ஒருகால் மகிழ்ந்திட
அன்பே ஒருமுறை என்னருகில் வாராயோ?

புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.
(54400)

கரையும் காலத்தில் கரையா
நினைவுகளுடன்
அன்பு மனைவி
திருமதி ச.சி.ஜெயராசா

## கிராய்க் குளம் கையளிப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.31

நியாப் II திட்டத்தின் கீழ் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட கிராய்க்குளத்தின் உத்தியோக பூர்வ கையளிப்பு வைபவம் கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்றது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ. மா.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொண்டு குளத்தின் பெயர்ப் பலகைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், யாழ். நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர், தொழில்நுட்ப அலுவலர்கள் ... இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
(202-135)

## ஆண்டு ஒன்றின் அழியாத நினைவுகள்



| மலர்வு | மறைவு |
|---|---|
| 21 | 11 |
| 11 | 11 |
| 1935 | 2005 |

அமரர் **இராசையா பராசக்தி**
(இளைப்பாறிய ஆசிரியை)
திதி: 31.10.2006

இகமதில் இனிமையாக
இதமுற வாழ்ந்த காலம்
அகமதில் நிலையானதம்மா!
எம்மை விட்டு நீங்கள் சென்று
ஆண்டு ஒன்றான போதும்
உம் நினைவு எம் நெஞ்சமதில்
மீண்டும் மலர்ந்து
மனமதில் நினைவானதம்மா!

88, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(54760)
பிள்ளைகள்.
(லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ - 9 விடயம் உடன்படிக்கைக்கு உட்பட்டது அதை மூடிவைத்திருப்பது அரசின் அடாத்து!

## ஐ.தே.கவையும் சாடுகின்றார் ரவிராஜ் எம்.பி.

கொழும்பு, ஒக். 31

அரசு அடாவடித்தனமாக ஏ-9 வீதியைத் திறக்க மறுத்ததே பேச்சு முறிவடைவதற்குக் காரணமாகும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.1. ஷரத்தின்படி ஏ - 9 வீதி திறந்திருக்க வேண்டும். இதை திறக்க மறுப்பது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. நடராஜா ரவிராஜ் நேற்று அரசு - புலிகள் பேச்சு தொடர்பாக உதயனுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐ.தே.கட்சி, ஏ-9 வீதி மூடப்பட்டது குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்காதது வருத்தத்துக்குரியதாகும். இது ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கபடநாடகம் ஆகும். யாழ். குடாநாட்டுக்கு மூன்று மாதங்களுக்கு 33 ஆயிரம் தொன் உணவு மற்றும் ஏனைய பொருள்கள் தேவைப்படும். ஏ-9 வீதி வழியாக முன்னர் நாளாந்தம் சுமார் 300 லொறிகள் யாழ். குடாநாட்டுக்குச் சென்றன. அரசு மூன்று மாதங்களில் வெறுமனே 18 ஆயிரம் தொன் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது. யாழ். குடாநாட்டு மக்கள் பட்டினியால் மரணத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனிதாபிமானவகையில்கூட அரசு செயற்படவில்லை.

ஏ - 9 வீதி திறந்திருக்கும்போது யாழ். குடாநாட்டில் அரிசி ஒரு கிலோ 32 ரூபா முதல் 36 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது. இன்று கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் அரிசி கூட்டுறவுச் சங்கக் கடைகளில் 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே அரிசி கள்ளச்சந்தையில் கிலோ 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அத்தியாவசியப் பொருள்கள் விமான மூலம் யாழ். குடா நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அரசு தெரிவித்த போதும் இவை இராணுவத்தினருக்காக அனுப்பிவைக்கப்பட்ட நுளம்புச் சுருள் மற்றும் சோப் வகைகளாகும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இலங்கையில் உடனடியாகப் போரா? ஜெனிவாவில் ஊடகவியலாளருக்கு ஏற்பட்ட சந்தேகம்

ஜெனிவா, ஒக். 31

ஜெனிவாப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினர் பேச்சுகள் முடிந்ததும் அங்கிருந்து நோர்வே, பின்லாந்து போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருந்தனர்.

ஜெனிவா புறப்படுவதற்கு முன்பாகவே அவர்களது பயணநிகழ்ச்சித்திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், இருதினங்கள் நடைபெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்ததை அடுத்து புலிகள் தங்கள் பயணத்திட்டத்தை மாற்றிக்கொண்டு உடனடியாகவே தாயகம் திரும்புகின்றனர்.

நோர்வே, பின்லாந்து பயணத்தை கைவிட்டுவிட்டு புலிகளின் பேச்சுக்குழு அவசர அவசரமாக நாடு திரும்பத் தீர்மானித்திருப்பது ஜெனிவாவில் தங்கியுள்ள ஊடகவியலாளர் மத்தியில் பல்வேறு ஊகங்களைக் கிளப்பிவிட்டது.

பேச்சுகள் தோல்வியடைந்து விட்டதால் முழு அளவில் போர் வெடிக்கப்போகின்றது. அதனைக் கருதியே புலிகளின் குழு அவசரமாக வன்னி திரும்புகின்றது என்று கருதிய பெரும்பான்மையின ஊடகவியலாளர்கள் சிலர், இது குறித்து பீதியடைந்து காணப்பட்டனர்.

இதேவேளை-

''பேச்சு மேசையில் என்ன நடந்தது என்பதை அறிய எமது மக்கள் ஆவலாக உள்ளனர். அதற்காகவே நாங்கள் தாயகம் திரும்புகிறோம்'' என்று புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வன் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

'போரா, சமாதானமா என்பது அரசின் கைகளில்தான்' என்று தமிழ்ச்செல்வன் கூறினார். (ஐ)

# ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் நூறு யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தன

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாகத் தேவைப்பட்ட நூறு ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ள இந்த சிலிண்டர்களை அங்கிருந்து எடுத்துவரும்பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் நேற்று சென்றிருந்தனர்.

ஒக்ஸிஜன் சிலிண்டர்களின் தட்டுப்பாடு காரணமாக அவசர சத்திர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சத்திர சிகிச்சைகள் தடைப்பட்டிருந்தமை தெரிந்ததே.

வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஞானசோதி கொழும்புசென்று மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. (அ-1)

# குடாநாட்டில் அத்தியாவசிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் நாளாந்தம் ஒன்பது மணித்தியாலங்களுக்கு விநியோகிக்கப்பட்டுவந்த மின்சாரம் இம்மாதம் 26ஆம் திகதி தொடக்கம் ஆறு மணிநேரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மின்சார விநியோக நேரம் நாளாந்தம் குறைக்கப்பட்டு நேற்றையதினம் இரண்டு மணித்தியாலமாக (காலையில்) மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டது. நேற்றிரவு விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டது. அதனால், நேற்றிரவு குடாநாடு இருளில் மூழ்கியது. பல வீடுகளில் மண்எண்ணெய் பற்றாக் குறையினால் ஒரு சில மணி நேரமே வெளிச்சம் தெரிந்தது.

### தொலைபேசிச் சேவை

தொலைபேசிச் சேவைகளும் குடாநாட்டில் பாதிப்புறும் அபாயம் தோன்றியுள்ளது. யாழ். பண்ணையில் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்துக்குத் தேவையான மின்சாரம் அங்குள்ள மின்பிறப்பாக்கி மூலமே பெறப்படுகிறது. ஆனால், அதனை இயக்குவதற்குத் தேவை யான டீசல் கையிருப்பு நாளாந்தம் குறைந்து வருகிறது. இன்னும் இரண்டொரு நாள்களில் அதுவும் தீர்ந்துபோகலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் தொலைபேசிச் சேவைகள் இரண்டொரு தினங்களில் ஸ்தம்பித்துப்போகலாம் என்று அறியவந்தது.

### யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாண்ம் போதனா வைத்திய சாலைக்கான மின் விநியோகமும் நேற்றுக்காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்பத்திரியில் உள்ள மின்பிறப்பாக்கிகள் மூலமே தற்சமயம் மின்விநியோகம் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்சாரசபையின் விநியோகம் கிடைக்காத நேரங்களில் மின்பிறப்பாக்கிகள் மூலமே மின்சாரம் வழங்கப்படுவது வழமையாகும்.

அது நிறுத்தப்பட்டதால், கையிருப்பில் உள்ள டீசலைக் கொண்டு மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் -

தொடர்ந்து மின்சாரசபையின் மின் விநியோகம் கிடைக்காவிட்டால், டீசல் முடிவடைந்து மின்விநியோகம் முழுமையாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும் அபாயம் உண்டாகும் என்று போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### வங்கிகளில்

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச, தனியார் வங்கிகளும் டீசல் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும்சாத்தியம்உண்டுஎன்றுகூறப்படுகிறது.

நகரிலும், பட்டினப்புறநகர்களிலும் உள்ள அநேக வங்கிகளில், மின்சார சபையின் விநியோகம் இல்லாத வேளைகளில் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் பெறப்படுவது வழக்கம். அந்த மின்பிறப்பாக்கிகளும் டீசலாலேயே இயக்கப்படுகின்றன.

இம்மாதம் 26ஆம் திகதியிலிருந்து 6 மணி நேரமின்சாரம் கிடைத்ததால், வங்கிகள் தமது மின்பிறப்பாக்கிகளை இயக்கியே வங்கிச் சேவை நேரத்தைக் குறைக்காமல் இயங்குகின்றன.

எனினும் தொடர்ந்து வழமையான அலுவல் நேரத்தை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்படலாம் என வங்கித்துறையினர் தெரிவித்தனர்.

இந்த நிலை குறித்து இன்று வங்கிகளின் நிர்வாகிகள் கூடி பரிசீலனை செய்யவுள்ளதாக அறியவந்தது.

### அலுவலகங்களில் பணிகள் முடங்கின

இதேவேளை தற்போது நிலவும் மின்வெட்டினால் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் முடங்கி உள்ளன.

யாழ்ப்பாணத்தில் அனேகமான பகுதிகளில் பகல்வேளை மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பாடசாலைகள் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள முடியாது திண்டாடுகின்றன.

பாடசாலைகளில் கணனியூடான கல்வியும், கணனிகளும் செயலிழந்து போயுள்ளன.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிலையும் இதே கதிதான்.

சில அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மின்பிறப்பாக்கிகள்மூலம் தமது பணிகளை முன்னெடுக்கின்றன. (அ-1-79-17-15)

# குடாநாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவாவில் தெரிவித்தனர்.

அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா, செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், ''ஏ-9 வீதியை நாங்கள் மூடவில்லை. புலிகள் தான் அங்கு தாக்குதல் நடத்தி பாதையை மூடும் நிலையை ஏற்படுத்தினர்'' - என்று தெரிவித்தார். (ஐ)

# அவசரமோ, ஆத்திரமோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாட முன்வருமாறு உற்சாகமூட்டியிருந்தன. இந்த அழைப்பை இரு சாராரும் மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தகாலகட்டத்தில் ஏற்றுக்கொண்டமை வரவேற்பிற்குரிய விடயமாகும்.

மனித அவலங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள், வன்முறைகளைக் குறைத்தல், அரசியல் தீர்வுக்கான அரசியல் பங்களிப்புகள் போன்ற மூன்று விஷயங்கள் சமாதான முன்னெடுப்பின்போது ஆராயப்படவேண்டிய தேவை ஏற்படும் என்றும், சம்பந்தப்பட்ட தரப்பினரால் இணக்கம் காணப்பட்டிருந்தது என்னும் முன்னுரையை தாங்கியுள்ள இந்த அறிக்கையில் மேலும் சொல்லப்படிருப்பதாவது:-

பேச்சின்போது அரசு, ஐ.தே.கவுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையியிலான அரசியல் முயற்சிகள் குறித்து எடுத்துக்கூறியது. இந்த முன் முயற்சியை சர்வதேச சமூகம் வரவேற்றிருக்கிறது. சர்வகட்சி மாநாடு குறித்தும் அரசு பேச்சின்போது பிரஸ்தாபித்துக்கொண்டது.

அவசர மனிதாபிமான தேவைகள், நிலைமைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையான பொதுமக்களின் அவலவாழ்வு குறித்து ஆராயவேண்டிய தேவை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசப்பட்டது. ஏ-9 பாதையைத் திறக்குமாறு விடுதலைப் புலிகள் கோரினார்கள். இதற்கு அரசு இணங்க மறுத்துவிட்டது. மனிதாபிமான நெருக்கடிகளை எவ்வாறு அணுகுவது, கையாளுவது என்பதுபற்றி இரு தரப்பாருக்கும் மத்தியில் எந்தவித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை.

புதிய சுற்றுப் பேச்சுக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றிய சாத்தியமான யோசனைகள் குறித்து நோர்வே சம்பந்தப்பட்டோருடன் கலந்து பேசிவருகிறது.

இரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீதான தமது உறுதிப்பாட்டை வலியுறுத்தியுள்ளனர். இராணுவ நடவடிக்கைகளை வலிந்து ஆரம்பிக்கப்போவதில்லை என்றும் உறுதி தந்திருக்கிறார்கள்.

பேச்சையடுத்து எழுந்துள்ள நிலைமைகளின் பிரதிபலிப்பைத் தெரிந்துகொள்வதற்கு சிறிது கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் இரு தரப்பாரையும் கேட்டிருக்கிறோம். எனவே, அதற்கிடையில் அவசரப்பட்டு எந்தவித முடிவுக்கும் வரவோ அல்லது இலங்கை வாழ் பொது மக்களின் அவலங்களை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளிலோ, செயல்களிலோ ஈடுபட வேண்டாமென்றும் இரு தரப்பாரையும் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் வைத்து மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரைச் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் எனக் கூறப்படுகின்றது.

சேருநுவர பிரதேசசபையின் ஒரேயொரு தமிழ் உறுப்பினரான இவர் ஒரு பட்டதாரி ஆவார். கடந்த பிரதேசசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு 912 விருப்பு வாக்குகளைப் பெற்று இப்பிரதேச சபைக்குத் தெரிவானார். இவரது கொலை தொடர்பாக சேருநுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)


## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு கமலாதேவி



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு கமலாதேவி நேற்று (30.10.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செளபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசுவின் (ஓய்வு பெற்ற சுகாதார உத்தியோகத்தர், தெல்லிப்பழை) அன்பு மனைவியும் சரோஜினிதேவி, கோபாலகிருஸ்ணன், சிதம்பரநாதன், குணமணிதேவி, விமலநாதன், லோகநாதன் (G.S. J/129) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேசன், சகுந்தலாதேவி, இராஜரட்ணம், சிவயோகம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் இரத்தினசிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் மச்சாளும் நடராசா, சின்னத்தங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (54815)

தகவல்:
கா.திருநாவுக்கரசு (கணவர் - ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர், தெல்லிப்பழை).

பௌதிகவியல் PAPER CLASS
அலகு ரீதியான மீட்டல்
மாதிரிவினாத்தாள்
ஆரம்பம் : 3.11.2006
வெள்ளி 3 pm
By:- K.SELVAN
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகே (54797)

A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| Ta. - குழந்தை | Acc. - தவா |
| Hcl. - ஜெயக்குமார் | Log. - கமல் |
| Geo. - பாபு | Ecc. - விக்கி |
| Dra. - மயூரன் | B.St. - யசோ |
| His. - கஜிதரன் | P.Sc. - றஜி |

A/L 07, 08 நடைபெறுகின்றன
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகே (54804)

A/L DAY CLASS
கலை, வர்த்தக பிரிவு
Eco : B. கஜீதரன்
Acc: P.பகீரதன்
Com: M.முரளி
Log: P.கமல்
H.cul: S.ஜெயக்குமார்
Tam: கீர்த்திராஜன்
Pol.Sci: றொபின்சன்
Geo: இக்னேசியஸ்
ஆரம்பம்:02.11.2006 Thu - 10.30 a.m.
A/L 2007, 2008 கலை, வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றன.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L 2008 வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று
ஆரம்பம் : இன்று 3 pm
A/L 2007
கம்பனி புதிய பிரிவு
ஆரம்பம் : இன்று 4 pm
A/L Day Class
திங்கள் - வெள்ளி 1.30 pm
S.தவா
SHAMROCK (54813)
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
பாண் விலை மாற்றம்
1.11.2006 தொடக்கம் 450 கிராம் நிறைகொண்ட ஓர் இறாத்தல் பாணின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
(சி-51248) நிர்வாகம்.

CHEMISTRY DAY CLASS
By:-அன்பழகன் B.Sc
1. INORGANIC Paper -Mon.-Fri. 10.30-11.30
2. ORGANIC Paper -Mon., Fri. 11.30-12.30
3. INORGANIC Paper -Thu., Wed. 11.30-12.30
4. SEMINAR -Tue. 10.30
5. அயன் சமநிலை -Sat., Sun. 10.30-12.00
யாவும் ஒரேயொரு கட்டணத்தில்
NEW SCIENCE CENTRE - யாழ்நகர் (54822)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org